வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் ரோஷ்னா காசீம்

தேதி 22.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி குவைத்தில் அந்நாட்டு பிரதமர், குவைத் அமீர், பட்டத்தது இளவரசர் உள்ளிட்டோரை சந்தித்து இன்று இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இளைஞர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்று சுயதொழில் தொடங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய அமைச்சகங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணி நியமன ஆணைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை வழங்க உள்ளார்.

புதுச்சேரியில் மக்கள் குறை தீர்ப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று காலை பிள்ளையார் குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பிரதமர்-குவைத்

பிரதமர் திரு நரேந்திர மோடி குவைத்தில் அந்நாட்டு பிரதமர், குவைத் அமீர், பட்டத்து இளவரசர் உள்ளிட்டோரை சந்தித்து இன்று இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்கிறார். முன்னதாக திரு மோடிக்கு குவைத்தில் உள்ள Bayan அரண்மனையில் அணி வகுப்பு மரியாதையுடன் கூடிய பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

குவைத்தில் உள்ள ஜாபர் அல் அகமத் சர்வதேச மைதானத்தில் நடைபெறும் 26-ஆவது அரேபிய வளைகுடா கோப்பை கால்பந்து போட்டி தொடக்க விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். குவைத், ஈரான், ஏமன் உள்ளிட்ட 8 நாடுகள் பங்கேற்கும் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த கால்பந்து போட்டி, இப்பகுதியில் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாகும்.

குவைத் நாட்டின் உயரிய விருதான ஆர்டர் ஆப் முபாரக் அல் கபீர் விருதை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு குவைத் அரசு வழங்கி கவுரவித்துள்ளது. பிரதமர் திரு மோடிக்கு கிடைத்த 20-

ஆவது சர்வதேச கவுரவம் இது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆர்டர் ஆப் முபாரக் அல் கபீர் என்பது நட்பின் அடையாளமாக அரசுத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு அரசக் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். இதற்கு முன் முன்னாள் அமெரிக்க அதிபர்கள் பில் கிளிண்டன், ஜார்ஜ் புஷ் மற்றும் இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் உள்ளிட்ட வெளிநாட்டு தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவில் நடைபெற உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின விழா, கும்பமேளா மற்றும் குடியரசு தின கொண்டாட்டங்களில் பங்கேற்க வருமாறு குவைத் மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

2 நாள் அரசு முறைப் பயணமாக நேற்று குவைத் சென்றடைந்த பிரதமர் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார். இந்தியா திறன் மேம்பாட்டுத் திட்டங்களை

உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப மேம்படுத்தி வருவதாக தெரிவித்த பிரதமர் சுகாதாரத் துறை, மருந்துப் பொருட்கள், தொழில் நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் பெருமளவு உள்ளதாக கூறினார்.

ஆற்றல், வர்த்தகம், முதலீடுகள் உள்ளிட்ட துறைகளில் விரிவடைந்துள்ள பரஸ்பர நட்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் இருநாட்டு உறவுகளை மேம்படுத்துவதில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு அளப்பரியது என்றும் திரு மோடி குறிப்பிட்டார்.

*மோடி-கிறிஸ்மஸ்*

புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ள கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார். இந்த நிகழ்ச்சியை இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை நடத்துகிறது. நாட்டில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகத்தில் நடைபெறும் இத்தகைய நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் கிறிஸ்துவ சமுதாயத்தின் முக்கியத் தலைவர்களுடன் பிரதமர் கலந்துரையாடுவார்.

*அமித் ஷா*

இளைஞர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்று சுயதொழில் தொடங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார். திரிபுரா மாநிலம் தலாயில் பல்வேறு நிறைவு பெற்ற திட்டங்களை தொடக்கி வைத்தும் 668 கோடி ரூபாய் மதிப்பிலான 13 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய அவர் கல்வியின் மூலம் இளைஞர்கள் வாழ்வின் மிக உயரிய இடத்தை எட்ட முடியும் என்றார். 3 நாள் பயணமாக அங்கு சென்றுள்ள அவர் அப்பகுதி மக்களுக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்றார்.

*ஃபிட் இண்டியா*

இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஃபிட் இண்டியா இயக்கம் குறித்த செய்திக் குறிப்பு………….. (வாய்ஸ்)

வேலை வாய்ப்புத் திருவிழா 6)

உள்துறை அமைச்சகம், அஞ்சல் துறை உயர்கல்வித் துறை, சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் உள்ளிட்ட மத்திய அமைச்சகங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணி நியமன ஆணைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை காலை 10.30 மணிக்கு காணொளி வாயிலாக வழங்கி உரையாற்ற உள்ளார். நாடு முழுவதும் 45 இடங்களில் இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நாட்டின் கட்டமைப்பில் இளையோரின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் வேலை வாய்ப்பு திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசிய கணித தினம்

தேசிய கணித தினம் இன்று கொண்டாடப்படுகிறது. கணிதமேதை ஸ்ரீனிவாச ராமனுஜரின் பிறந்த நாளை கவுரவிக்கும் விதமாக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. கணிதம், கண்டுபிடிப்புக்கான ஒரு பாலம் என்பதே

இவ்வாண்டுக்கான கருப்பொருள். ராமானுஜத்தின் கணித கண்டுபிடிப்புகள் இன்றளவும் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத் தக்கது.

*நாட்டிய விழா*

இந்திய நாட்டிய விழா மாமல்லபுரத்தில் இன்று தொடங்கி அடுத்த மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இவ்விழாவில் கரகம், பொய்க்கால் குதிரை உள்ளிட்ட பல்வேறு நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. 1 மாத காலம் நடைபெறும் இவ்விழாவில் ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பங்கேற்க உள்ளனர்.

*மக்கள் குறை தீர்ப்பு*

புதுச்சேரி அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைகள் வங்கியுடன் இணைந்து மக்கள் குறை தீர்ப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி இன்று காலை பிள்ளையார் குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர்

(வாய்ஸ்)

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

டெல்லி

டெல்லியில் காற்று மாசின் தரம் மேலும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. இன்று காலை 11 மணி நிலவரப்படி சராசரி காற்று தரக் குறியீடு 395-ஆக உள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் கடும் பனிப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இமாச்சல பிரதேசத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்றும் உத்தராகண்ட், பஞ்சாப், அரியானா, சண்டிகர், டெல்லி, உத்தரபிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் குறைந்த

பட்ச வெப்பநிலை 4 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

ஜெர்மனி

ஜெர்மனியில் Magdeburg கிறிஸ்மஸ் சந்தைகயில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த தாக்குதல் சம்பவம் மிகவும் பயங்கரமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நேரிட்ட இந்த தாக்குதலில் 5 பேர் உயிர் இழந்தனர். 200 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களுடன் இந்திய தூதரகம் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்

பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் அடுக்குமாடி குடியிருப்ப ஒன்று இடிந்து விழுந்ததில் 2 பேர் உயிரிழந்தனர். கட்டிட இடிபாடுகளில் சிக்கி இருப்பவர்களை மீட்கும் பணியில் தேசிய

பேரிடர் மீட்பு படையினர், ராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக அம்மாநில காவல் துறை தெரிவித்துள்ளது. மேலும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கத்தார்*

சிரியா நாட்டில் மீண்டும் தங்கள் தூதரகத்தை திறந்திருப்பதாக கத்தார் அரசு தெரிவித்துள்ளது. சிரியாவில் நடந்த 13 ஆண்டுகால உள்நாட்டு போர் முடிவிற்கு வந்ததை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கத்தார் கூறி உள்ளது. கடந்த வாரம் கத்தார் அரசு பிரதிநிதிகள் குழு டாமாஸ்கஸ் சென்று இருதரப்பு பேச்சுகள் நடத்திய நிலையில் இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

*கிரிக்கெட்*

19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான மகளிர் 20-20 கிரிக்கெட் ஆசிய கோப்பையை இந்தியா வென்றுள்ளது. மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் 41 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை தோற்கடித்தது.

கிரிக்கெட் (5)

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே வதோதராவில் நடைபெற்று வரும் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் போட்டியில் இந்தியா -------- ரன்கள், எடுத்துள்ளது. தொடர்ந்து ஆடி வரும் வெஸ்ட் இண்டிஸ் அணி----------- ஓவரில், ------------ விக்கெட் , இழப்பிற்கு ------------ ரன்கள் எடுத்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.